# மாகாணக் கல்வித் திணைக்களம்
## வடக்கு மாகாணம்
## Provincial Department of Education, Northern Province

### மாதாந்த பயிற்சி வினாத்தாள்

| | | |
|---|---|---|
| தரம் - 13 | பொருளியல் – யூலை – 2022 | 1 மணித்தியாலம் |

01. பின்வரும் சொத்துக்களில் குறைந்த திரவத்தன்மை வாய்ந்தது எது?
1. சேமிப்பு வைப்புகள்
2. திறைசேரி உண்டியல்கள்
3. கேள்வி வைப்புகள்
4. திறைசேரி முறிகள்
5. மெய்ச் சொத்துக்கள் (Real estate)

02. பணத்தின் மிக முக்கியமான அம்சம்?
1. அது பண்டமாற்றிலுள்ள கஷ்டங்களை நீக்குகின்றது.
2. அது பரிமாற்று ஊடகமாக தொழிற்படுகின்றது
3. அது தொழிற்பிரிப்பு சிறப்புத்தேர்ச்சி என்பவற்றை ஊக்கப்படுத்துகின்றது.
4. நிறைவான திரவத்தன்மையை கொண்டது
5. அது எடுத்துச் செல்வதற்கு இலகுவாயிருத்தல

03. ‘அண்மிய பணம்’ என்னும் எண்ணக்கருவினால் கருதப்படுவது,
1. மூலதனப் பெறுமதிகள் அதிகளவில் தளம்பலுக்கு உட்படுவதனால் பணமாகக் கருதப்படமுடியாத நிதிச் சொத்துக்களாகும்.
2. பரிமாற்ற ஊடகமாகத் தொழிற்படும் அதேவேளை பெறுமானத் திரட்டாகத் தொழிற்பட முடியாத திரவச் சொத்துக்களாகும்.
3. பெறுமானத் திரட்டாக தொழிற்படும் அதேவேளை பரிமாற்ற ஊடகமாகத் தொழிற்பட முடியாத திரவச் சொத்துக்களாகும்.
4. கேள்வி வைப்புகள் மீது வரையப்படும் காசோலைகளாகும்.
5. கடன் அட்டைகளாகும்.

04. பின்வரும் பண நிரம்பல் கணிப்பீடுகளில் தவறானது எது?
1. $M_1$ = பொதுமக்கள் வசமுள்ள நாணயம் + பொதுமக்களின் பெயரில் வர்த்தக வங்கிகளில் உள்ள கேள்வி வைப்புக்கள்
2. $M_2 = M_1$ + சேமிப்பு தவணை வைப்புக்கள்.
3. $M_{2b} = M_2$ + சீரமைக்கப்பட்ட வெளி நாட்டு நாணய வைப்புக்கள்.
4. $M_4 = M_{2b}$ + உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் மற்றும் நிதிக் கம்பனிகளில் உள்ள பொதுமக்களின் பெயரிலான அண்மிய பணம்.
5. $M_0$ = பொதுமக்க்கள் வசமுள்ள நாணயம்.

05. தற்பொது இலங்கையின் $M_4$ பணத்திரட்டின் மிகப் பெரிய கூறாக அவைது
1. பொதுமக்கள் வசமுள்ள நாணயம்
2. பொதுமக்கள் பெயரிலுள்ள கேள்வி வைப்புகள்
3. உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளில் பொதுமக்கள் வைத்துள்ள போலிப் பணம்
4. வணிக வங்கிகளில் பொதுமக்கள் வைத்துள்ள போலிப் பணம்
5. உரிமம் பெற்ற சிறப்பு வங்கிகளில் பொதுமக்கள் வைத்துள்ள போலிப் பணம்

06. இலங்கையின் நிதியியல் துறை தொடர்பான தரவுகள் பின்வருமாறு தரப்பட்டுள்ளது

| விடயம் | 2019 முடிவில் பெறுமதி (பில்லியன் ரூபாவில்) |
|---|---|
| • மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டு சொத்துக்கள் | 900 |
| • வங்கித்தொழில் முறைமையின் தேறிய வெளிநாட்டு சொத்துக்கள் | 150 |
| • மத்திய வங்கியின் தேறிய உள்நாட்டு சொத்துக்கள் | 100 |
| • வங்கித்தொழில் முறைமையின் தேறிய உள்நாட்டு சொத்துக்கள் | 6200 |
| • வர்த்தக வங்கிகள் தனியார் துறைக்கு வழங்கிய தேறிய கொடுகடன் | 4800 |

இலங்கையின் ஒதுக்குப்பணமும் ஒன்றிணைக்கப்பட்ட விரிந்த பண நிரம்பலும் எவ்வளவாகக் காணப்படும்?

| | ஒதுக்குப்பணம் | ஒன்றிணைக்கப்பட்ட விரிந்த பணநிரம்பல் |
|---|---|---|
| 1. | 1000 | 6350 |
| 2. | 1000 | 7200 |
| 3. | 7100 | 6350 |
| 4. | 1050 | 6350 |
| 5. | 1150 | 6450 |

07. "இலங்கையில் 2020 ஆம் ஆண்டில் பணநிரம்பல் (M4) ஏறத்தாழ 2017.4 மில்லியன் ரூபாக்களினால் அதிகரித்தது" இவ்வதிகரிப்புக்குப் பங்களிப்புச் செய்த பிரதான காரணி யாது?

1. தேறிய வெளிநாட்டுச் சொத்துகளிலான அதிகரிப்பு
2. அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடனில் ஏற்பட்ட அதிகரிப்பு
3. உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் தேறிய உள் நாட்டுச் சொத்துக்கள் அதிகரித்தமை.
4. அரசாங்கக் கூட்டுத்தாபனங்களுக்கான கொடுகடனில் ஏற்பட்ட அதிகரிப்பு
5. பொதுமக்கள் வைத்திருந்த கேள்வி வைப்புகளிலான அதிகரிப்பு

08. பணவீக்கம் என்பது

1. பொது விலை மட்டத்தில் தொடர்ச்சியாக அதிகரிப்பு
2. பொது விலை மட்டத்தில் தொடர்ச்சியான வீழ்ச்சி
3. நுகர்வோர் விலைச்சுட்டியின் மாற்ற வீதம்
4. நுகர்வோர் விலைச்சுட்டியின் அதிகரிப்பு வீதம்
5. பணத்தினது கொள்வனவு சக்தியின் மாற்ற வீதம

09. பெறுமதி சேர்க்கப்பட்ட வரியில் (VAT) ஏற்படும் ஓர் அதிகரிப்பு கேள்வித் தூண்டற் பணவிக்கம் மற்றும் செலவுத் தூண்டற் பணவீக்கம் என்பவற்றின் மீது ஏற்படுத்தக் கூடிய சாத்தியமான விளைவுகள் எவை?

| கேள்வித் தூண்டற் பணவீக்கம் | செலவுத் தூண்டற் பணவீக்கம் |
|---|---|
| 1. வீழ்ச்சி | அதிகரிப்பு |
| 2. அதிகரிப்பு | வீழ்ச்சி |
| 3. அதிகரிப்பு | அதிகரிப்பு |
| 4. வீழ்ச்சி | வீழ்ச்சி |
| 5. அதிகரிப்பு | பாதிப்பில்லை |

10. குறித்த காலப்பகுதியில் நாடொன்றின் பெயரளவு மொத்த உள் நாட்டு உற்பத்தி 6 வீதத்தால் அதிகரித்தது. பண நிரம்பல் 4 வீதத்தால் அதிகரித்தது எனில் பின்வருவனவற்றுள் எது உண்மையாக இருக்கும்?

1. நாட்டின் மெய் மொத்த உள் நாட்டு உற்பத்தியும் 6 வீதத்தால் அதிகரித்திருக்கும்.
2. நாட்டின் பணவீக்க வீதம் 4 வீதமாகக் காணப்படும்.
3. பணத்தின் புழக்க சுற்றோட்ட வீதம் 2 வீதத்தால் அதிகரித்திருக்கும்.
4. நாட்டின் பணவீக்க வீதம் 6 வீதமாகக் காணப்படும்.
5. மொத்தக் கேள்வி 6 வீதத்தினை விட கூடிய பெறுமதியில் அதிகரித்திருக்கும்.

11. எதிர்பாராதவகையிலான உயர்மட்ட பணவீக்க விலை அதிகரிப்பு ஏற்படும்போது அதன் மூலம்
பெரும்பாலும் நன்மையடையும் குழு பின்வருவனவற்றுள் எது?

1. ஓய்வூதியம் பெறும் தொழிலாளர்கள்
2. கடன் வழங்குநர்கள்
3. சம்பளம் உழைப்போர்
4. தாம் வேலைசெய்த காலத்தில் பணத்தைச் சேமித்து வைத்துள்ள தற்போது வயது முதிர்ந்த நபர்கள்
5. கடன்பெற்றோரா

12. மெய்வட்டி விகிதம் எதிர்க் கணியமாகவிருப்பின்

1. பெயரளவிலான வட்டி விகிதம் பணவீக்க விகிதத்திலும் கூடுதலாகவிருக்கும்.
2. அரசாங்கத்தினது கடன்பளு வீழ்ச்சியடையும்.
3. பெயரளவிலான வட்டி வீதம் பணவீக்க விகிதத்திலும் குறைவாகவிருக்கும்.
4. தனிநபர் சேமிப்புகளின் மெய்ப்பெறுமதி குறையும்.
5. வட்டி விகிதம் உயரக்கூடும்.

13. கருதுகோள் ரீதியான ஒரு பொருளாதாரத்தில் பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தி ரூபா 8 டிரில்லியனாகவும், பணநிரம்பல் ரூபா 2 டிரில்லியனாகவும் இருப்பின் பணத்தின் சுற்றோட்ட வேகம்.

1. 0.25 ஆகும். 2. 2 ஆகும். 3. 4 ஆகும்.
4. 6 ஆகும். 5. 8 ஆகும்.

14. இலங்கையின் நிதியியல் முறைமையின் சிறப்பியல்பு வாய்ந்த நிதியியல் நிறுவனத்திற்குள் உள்ளடங்கும் நிறுவனம் ஒன்று

1. உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்
2. ஊழியர் சேமலாப நிதியம்
3. துணிகர மூலதனக் கம்பனிகள்
4. கூட்டுறவு கிராமிய வங்கிகள்
5. காப்புறுதிக் கம்பனிகள

15. பின்வரும் கூற்றுகளுள் எது நாணயக்கொள்கையினை சரியாக வரைவிலக்கணப்படுத்துகிறது?

1. விலைகளையும் வருமானங்களையும் நேரடியாகக் கட்டுப்படுத்துதல்.
2. வரியிடலையும் அரசாங்க செலவீட்டையும் கட்டுப்படுத்துதல்
3. மத்திய வங்கி தன் நோக்கங்களை அடைவதற்காக பண நிரம்பல், வட்டி வீதங்களை ஒழுங்கு படுத்துதல்.
4. அரசாங்கப் பாதீட்டை முகாமை செய்தல்.
5. வெளிநாட்டு நாணயமாற்று வீதம

16. திறந்த சந்தையில் அரச முறிகளைக் விற்பனை செய்யும் மத்திய வங்கியின் நடவடிக்கை காரணமாக

1. வங்கிகளின் ஒதுக்குகள் அதிகரித்து பண அடித்தளம் விரிவடையும்.
2. வங்கிகளின் ஒதுக்குகள் விழ்ச்சியடைந்து பண அடித்தளம் சுருக்கமடையும்.
3. வங்கிகளின் ஒதுக்குகள் அதிகரித்து பண அடித்தளம் சுருக்கமடையும்.
4. வங்கிகளின் ஒதுக்குகள் வீழ்ச்சியடைந்து பண அடித்தளம் விரிவடையும்.
5. வங்கிகள் மிகை ஒதுக்குகளைக் கொண்டிருப்பின் வங்கிகளின் ஒதுக்குகள் வீழ்ச்சியடையும் ஆனால் பணநிரம்பல் அதிகரிக்கும்.

17. பின்வருவனவற்றுள் பொருளாதாரமொன்றின் பணநிரம்பலை வீழ்ச்சியடையச் செய்வதில் செல்வாக்குச் செலுத்தும் காரணி எது?

1. வருமானவரி வீதங்களில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி
2. கழிவீட்டு வீதத்தில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி
3. மத்திய வங்கியினால் திறந்த சந்தையில் அரசாங்க முறிகள் கொள்வனவு செய்யப்படல்
4. நியதி ஒதுக்குத் தேவையில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு
5. பொருள்கள் சேவைகள் மீதான அரசாங்கச் செலவீட்டில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு

18. வணிக வங்கி ஒன்று ரூ. 8000 மிகை ஒதுக்குகளையும், வைப்புப் பொறுப்புக்கள் ரூ. 80 000 ஐயும் கொண்டிருப்பதாக கருதுக. ஒதுக்கு விகிதம் 15% ஆயின் வங்கியிடம் உள்ள உண்மைப் பண ஒதுக்கின் அளவு.

1. ரூ. 6 000
2. ரூ. 16 000
3. ரூ. 20 000
4. ரூ. 26 000
5. ரூ. 36 000

19. எல்லா வங்கிகளும் சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட குறைந்தபட்ச ஒதுக்குகளை மாத்திரம் பேணுவதாகவும் வங்கித்துறையிலிருந்து பண வெளிப்பாய்ச்சல்கள் எதுவும் இடம்பெறவில்லை எனவும் கருதுக. சட்டரீதியான ஒதுக்குத்தேவை 10% ஆகும். வாடிக்கையாளர் ஒருவர் தனது நடைமுறைக் கணக்கில் ரூபா 1000ஐ வைப்புச் செய்வாராயின், மொத்த பணநிரம்பலில் ஏற்படக்கூடிய மிகக்கூடிய அதிகரிப்பு யாது?

1. ரூபா 100 2. ரூபா 1000 3. ரூபா 9000 4. ரூபா 10000 5. ரூபா 11000

20. வங்கி முறைமையானது ஒரேயொருவங்கியை மாத்திரம் கொண்டுள்ள மூடப்பட்ட பொருளாதாரமொன்றைக் கருதுக. இவ்வங்கியானது 10% காசொதுக்கு வீதத்தைக் கொண்டுள்ளது. வாடிக்கையாளர்கள் ரூபா 10,000 பணத்தை வைப்பில் இடுகின்றார். புழக்கத்திலுள்ள தாள் குற்றி நாணயங்களின் அளவில் மாற்றங்கள் ஏதும் ஏற்படவில்லை எனக் கருதினால் இவ்வங்கி வழங்கக் கூடிய கடனின் உச்ச அளவு யாது?

1. ரூபா 1000 ஆகும்.
2. ரூபா 9000 ஆகும்.
3. ரூபா 10000 ஆகும்.
4. ரூபா 90000 ஆகும்.
5. ரூபா 100000ஆகும்.

21. வணிக வங்கியின் சிறப்பியல்பு பின்வருவனவற்றுள் எதுவாகும்?
1. பொதுமக்களின் வைப்புக்களை ஏற்றுக் கொள்ளுதல்
2. கடன்கள் மற்றும் முற்பணங்ளை வழங்குதல்
3. ஆவணங்களை கொள்வனவு விற்பனை செய்தல்
4. கொடுகடன் ஆக்கும் ஆற்றலைக் கொண்டிருத்தல்
5. நாணயம் கடிதங்களை வழங்குதல

22. நபர் ஒருவர் தனது வணிக வங்கி வைப்புக்கணக்கிலிருந்து ரூபா 10000ஐ மீளப்பெறுவாராயின்
ஏனையவை மாறாத நிலையில் வங்கியின் நியதி ஒதுக்குத்தேவை 20வீதம் ஆக இருப்பின் இக்கொடுக்கல் வாங்கல் காரணமாக நேரடியாக
1. பண நிரம்பல் ரூ.10000இனால் குறைவடையும்
2. வங்கி வைப்புக்கள் ரூ.10000இனால் குறைவடையும்
3. பண நிரம்பல் ரூ.50000இனால் குறைவடையும்
4. வங்கி வைப்புக்கள் ரூ.50000இனால் குறைவடையும்
5. வங்கி வைப்புக்கள் ரூ.8000இனால் குறைவடையும்

23. வங்கி முறைமையில் உள்ள ஒரு வணிக வங்கியிடம் 300 மில்லியன் ரூபா மிகை ஒதுக்குகள் இருப்பதாகவும், நியதி ஒதுக்குத் தேவை 10% ஆகவும் உள்ளதாகக் கருதுக. அதேவேளை இவ்வங்கியின் வாடிக்கையாளர் ஒருவர் தனது நடைமுறைக் கணக்கில் 50 மில்லியன் ரூபாவை வைப்புச் செய்யும்போது வங்கியானது இன்னொரு வாடிக்கையாளருக்கு 150 மில்லியன் ரூபாவை கடன் வழங்குகிறது. தற்போது இவ்வங்கியினால் இதற்கு மேலதிகமாக எவ்வளவு கடன் வழங்கப்பட முடியும்?
1. 195 மில்லியன் ரூபா 2. 205 மில்லியன் ரூபா
3. 425 மில்லியன் ரூபா 4. 345 மில்லியன் ரூபா
5. 350 மில்லியன் ரூபா

24. வணிக வங்கி முறைமையொன்றிலுள்ள வங்கிகள் தமது வைப்புகளில் 20% இனை காசொதுக்காகப் பேணுவதாகவும் இதில் ஒரு வங்கி ரூபா 200 மில்லியன் புதிய காசு வைப்பினை பெற்றுக்கொள்வதாகவும் கருதுக. புழக்கத்திலுள்ள பணத்தினளவில் மாற்றங்கள் ஏதும் ஏற்படாவிடின் புதிய வைப்பின் மூலம் வங்கி முறை உருவாக்கக்கூடிய புதிய கடன்களின் உச்ச அளவு யாது?
1. ரூபா 160 மில்லியன் ஆகும்.
2. ரூபா 200 மில்லியன் ஆகும்.
3. ரூபா 800 மில்லியன் ஆகும்.
4. ரூபா 1000 மில்லியன் ஆகும்
5. ரூபா 1200 மில்லியன் ஆகும்.

25. ஒரு வணிக வங்கியில் மேற்கொள்ளப்படும் ரூபா 300 மில்லியன் வைப்பானது பணநிரம்பலில் ரூபா 3000 மில்லியன் அதிகரிப்புக்கு இட்டுச் செல்லுமாயின், இருந்திருக்க வேண்டிய ஒதுக்கு வீதம்

1. 0.10%    2. 0.12%    10%    4. 12%    5. 100%